தலைப்பு **217** – நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்

---

**1.** நிதிக் கூற்றுகள்

**1.1** முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி ஓட்டக் கூற்றுகள் என்பவற்றை கொண்டமைந்த 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகைகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்ந்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2020 யூன் 10 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தில் 11(2) பிரிவு பிரகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 02 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட குறித்த நிதிக் கூற்றுகளில் 2019 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3. **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரதும் கணக்கு கொடுக்கும் அலுவலரதும் பொறுப்புக்கள்**

---------------------------------------------

பொதுத் துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கமைவாகவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாகவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகளை நிருணயித்தல் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரதும் கணக்கு கொடுக்கும் அலுவலரதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டதில் 38(1)(ஈ) உப பிரிவு பிரகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்தல் வேண்டுமென்பதுடன், குறித்த முறைமையின் பயனுள்ள தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன்படி முறைமை பயனுள்ளவாறு மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும்.

1.4. **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அதிபதியின் சாராம்ச அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச்

சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கு கொடுக்கும் அலுவலரை அறிவுறுத்தப்பட்டது.

1.5 ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 6 (1) (ஈ) பிரிவு மற்றும் 38 ஆவது பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துகின்றேன்.

(அ) இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் உள்ளடக்கியுள்ள அவதானிப்புகளின்படி நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒழுங்கமைந்திருக்கவில்லை.

(ஆ) இவ்வறிக்கையில் 1.6.2. பந்தியில் உள்ளடக்கியுள்ள அவதானிப்புகள் தொடர்பில் கடந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுகள் தொடர்பான அபிப்பிராயம்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கடந்த ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி ரூபா. 64,605,215 ஆனதுடன், அந்த மீதி மீளாய்விற்கான ஆண்டில் ஆரம்ப மீதியாக முன் கொண்டு வருகையில் ரூபா.64,971,627 என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் ரூபா. 366,41**2** ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், அந்த வேறுபாடு நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | ஆரம்ப மீதிக்கு மேற்கொண்ட சீராக்கல் குறிப்பு மூலம் நிதிக் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தல் வேண்டும். | எதிர் வருங் காலங்களில் நிதிக் கூற்றுகளில் வெளிப்ப-டுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | தேர்தல் ஆணைக்குழுவால் மீளளிப்புச் செய்ய வேண்டிய கட்டுநிதி கணக்கில் ரூபா.**164,931** ஆன மீதியை, நிதி நிலைமை கூற்றுகளில் நடைமுறை பொறுப்பாக மற்றும் நடைமுறை சொத்துக்களின் கீழும் பணமும் பணத்திற்கு சமமானவைகளின் கீழும் குறிப்பிடப்படவில்லை. | நடைமுறை சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் செவ்வையாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். | தவறுதலாக அப் பெறுமதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்குவதற்கு தவறவிட-ப்பட்டுள்ளது.செவ்வையாக்குவத ற்கு நடவடிக்கை மேற்கொள்-ளப்பட்டது. |

**1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்களை பராமரிக்கப்படாமை**
**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| (அ) பினை ஆவணம் | | |
| நிதி ஒழுங்குவிதி 891(1) பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கிய பிணை ஆவணம் தயாரிக்கப்பட்டிரு-க்கவில்லை. | நிதி ஒழுங்குவிதி 891(1) குறிப்பிடபப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் தொடர்பாக பிணை ஆவணம் பேணுதல் வேண்டும். | பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| (ஆ) நட்டங்கள் தொடர்பான ஆவணம் | | |
| நிதி ஒழுங்குவிதி 110 பிரகாரம் நட்டங்கள் தொடர்பான ஆவணம் பேணப்படவில்லை. | நிதி ஒழுங்குவிதி 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் உள்ள படிவங்கள் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான ஆவணம் பேணுதல் வேண்டும். | இற்றைப்படுத்தி பேணுவ-தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| (இ) பொறுப்புகள் தொடர்பான ஆவணம் | | |
| நிதி ஒழுங்குவிதி 214 இன் பிரகாரம் பொறுப்புகள் தொடர்பான ஆவணம் பேணிச் செல்லப்படவில்லை. | நிதி ஒழுங்குவிதி 214 பிரகாரம் பொறுப்புகளை பரிசோதனை செய்வதற்கு முடியுமான வகையில் பொறுப்புகள் தொடர்பான ஆவணமொன்றில் குறித்த பொறுப்புகளை குறிப்பிடுதல் வேண்டும் | 2020 ஆண்டு தொடக்கம் பேணிச் செல்வதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எனபவற்றின் தொடர்** | **ஒழுங்கமையாமை** | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>(அ) 3.7 பிரிவு | கடன் தொகை மீள அறவிடலானது, கடன் தொகை வழங்கப்பட்ட மாதத்துடனான அடுத்து வரும் மாதம் தொடக்கம் மேற்கொள்ளுதல் வேணடுமாயினும், அவ்வாறு நடவடிக்கை மேறகொள்ளப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | 2020 சனவரி மாதம் தொடக்கம் எல்லா அலுவலர்களின் பொருட்டு சம்பளம் செலுத்தலானது, திணைக்களம்மூலம் மேற்கொள்வதால் எதிர்வரும் காலத்தில் இப் பிழை ஏற்படமாட்டாது. |
| (ஆ) 3.8 பிரிவு | இடர் கடன் பொருட்டு 4.2% ஆன வட்டி தொகை அறவிடப்பட வேண்டுமாயினும். 16 அலுவலர்களிடமிருந்து ரூபா.79,077 ஆன வட்டி தொகை அவ்வாறு அறிவிடப்படவில்லை. | திணைக்களம் மற்றும் மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலகங்களுக் கிடையில் சிறந்த கூட்டிணைப்பை பேணிச் செல்லுதல் வேண்டுமென்பதுடன் ,அறவிடப்படாத வட்டியை அறவிடுதல் வேண்டும். | 2020 தொடக்கம் எல்லா அலுவலர்களதும் சம்பளம் தயாரித்தல் தலைமை அலுவலகம் மூலம் மட்டும் மேற்கொள்ளப்படுவதால் 2020 ஆண்டு தொடக்கம் எதிர்வருங் காலத்தில் வட்டி குறைவாக அறவிடப்படமாட்டாது. குறைவாக அறவிடப்பட்ட வட்டி தொகை அறவிடுவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. தொழில்பாட்டு மீளாய்வு

### 2.1 நோக்குகை மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச தர நியமங்களுக்கு அமைவாக அநாதைகள், கைவிடப்பட்ட மற்றும் அநாதரவான சிறுவர்- | செயற்பணிக்கு அமைவாக நடைமுறைப்படுவதற்கு | மாற்று பாதுகாப்பு கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| களையும் சட்ட ரீதியான பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ள சிறுவர்களையும் விசேடமாகக் கொண்டு சகல சிறுவர்களது உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு சமமான வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்தல் திணைக்களத்தின் செயற்பணி-யாக இருப்பினும், திணைக்களம் ஆரம்பி-க்கப்பட்ட 1956 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது 62 ஆண்டுகள் சென்றிருப்பினும், சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கும் வகையில் உலகளாவிய சாசனத்திற்கு அமைவாக தேசிய கொள்கை தயாரித்தல் மற்றும் அதற்கு ஏற்புடையதான சட்டம் தயாரித்தல் 2019 ஆம் ஆண்டிலும் மேற்கொண்டிருக்கவில்லை. | தேசிய கொள்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். | |

## 2.2 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| 2014 பெப்ருவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் 03 பந்தி பிரகாரம் சம்பந்தப்பட்ட ஆண்டுக்கு இற்றை-ப்படுத்திய நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரி-க்கப்பட்ட பணியாற்தொகுதி மற்றும் தற்போது சேவையில் உள்ள பணியாற்தொகுதி தொடர்-பான விபரங்கள் உள்ளடங்கும் வகையில் செயற்றிட்டம் தயாரிக்கப்படவில்லை. | சுற்றுநிருப ஏற்பாடுகளின்படி படி செயற்படல் வேண்டும். | செயற்றிட்டம் தயாரிப்-பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2.3 போதுமானதாக நிறைவேற்றப்படாத கடமைப் பொறுப்புகள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| (அ) சிறுவர் இல்லங்களின் மேற்பார்வை என்ற செலவு விடயத்தின்கீழ், சிறுவர் இல்ல-ங்களின் மேற்பார்வை, சிறுவர்களை பராமரிப்பு செய்பவர்களை பயிற்றுவித்தல், அடையாளம் காணப்பட்ட சிறுவர் இல்ல-ங்களில் உள்ள சிறுவர்களை சமூகம-யப்படுத்தல் ஆகிய 03 பணிகளை நிறை-வேற்றுவதற்கு திட்டமிடப்பட்டு | செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொரு-ட்டு ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தல் வேண்டும். | மாகாண சபைகளின் கீழ் உள்ள சிறுவர் இல்ல-ங்களின் மேற்பார்வை நடவடிக்கைகள் தொட-ர்பான அதிகாரங்கள் இத் திணைக்களத்திடம் இல்-லை என்பதுடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதி- |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.4,500,000 ஆன ஒதுக்கீடு அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நோக்கங்களுக்கு புறம்பாக சிறுவர் இல்லங்களை புனரமைத்தல் மற்றும் சிறுவர் பயிற்சி ஆலோசகர் நிலையமொனான்றில் தொழில்பாட்டு செலவினங்களின் பொருட்டு ரூபா.543,420 செலவிடப்பட்டிருந்தது. அதேபோன்று 07 சிறுவர் இல்லங்களை மேற்பார்வை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், முன்னேற்ற அறிக்கை பிரகாரம் 03 சிறுவர் இல்லங்களை மேற்பார்வை செய்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் மேற்பார்வை செய்தமை தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்படவில்லை. | | கார சபைக்கு அது தொடர்பாக அதிகாரம் உள்ளது. அந்த மேற்பார்வைகளின்போது அடையாளம் காணப்பட்ட சிறுவர் இல்லங்களை ஆகக் குறைந்த மட்டத்திலேனும் பராமரிப்புச் செய்வதற்கான தேவைகளை பூரத்தி செய்வதற்கு அவர்களிடம் ஒதுக்கீடுகள் செய்யப்படாமை காரணமாக, எமது திணைக்களம்மூலம் அந்த தேவைகளின் பொருட்டு ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன. போதியளவிலான ஒதுக்கீடு இவ்விடயத்திற்கு கிடைக்கப்பெறாமை காரணமாக மூன்று நிறுவனங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது. |
| (ஆ) | சிறுவர் இல்லங்களின் சீரமைப்பு என்ற செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூபா.3,246,407 ஐ 10 சிறுவர் இல்லங்களை சீரமைப்பு செயவதற்காக மாகாண நன்னடத்தை ஆணையாளர்களிடம் அனுப்பி வைக்கப்பட்டது. திட்டமிடப்பட்ட சீரமைப்பு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு முன்னர் பணம் அனுப்பியதன் காரணமாக அந்த பணத் தொகை பொது வைப்புக் கணக்கில் வைத்துக் கொண்டிருத்தலும், திட்டங்களில் பின்னர் மாற்றங்களை மேற்கொண்டு வேறு கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றியமையும், பணம் எஞ்சுதல் மற்றும் கடமைப் பொறுப்புகளை உரியவாறு நிறைவேற்றப்பட்டமைக்கான பின்னாய்வுகளை மேற்கொள்ளாமையும் ஆகிய விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | உரியவாறு உறுதிப்படுத்தாது வேறு தரப்புகளுக்கு பணம் வழங்குதலாகாது. | மாகாண திணைக்களங்களால் அவர்களின் பொது வைப்புக் கணக்குகளில் வைத்துக்கொண்டு உரிய பணிகள் முடிவுறுத்திய பின்னர் வெளியக தரப்புகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதாக, |
| (இ) | சிறுவர் இல்லங்களில் உள்ள 03 சிறுவர்களை சமூகமயப்படுத்துவதற்காக வீடமைப்பு கருத்திட்டம் பொருட்டு மாகாண நன்னடத்தை ஆணையாளர்களிடம் ரூபா.300,000 ம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் காணிகள் இல்லாமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும், இந்த வீடமைப்பு கருத்திட்டம் ஆரம்பிக்கப்படாத படியால் அந்த பணம் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் | மாகாண ஆணையாளர்களின் கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு உரிய முறைமை பின்பற்றுதல் வேண்டும். | எமது திணைக்களத்தின் நோக்கம் யாதெனில், இல்லங்களில் உள்ள சிறுவர்களை இயன்ற வரை சமூகமயப்படுத்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் என்பதால் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது உரிய பணம் வழங்குதலை அங்கீகரிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. மாகாண நன்னடத்தை ஆணையாளர்களது கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு உரிய முறைமை பின்பற்றாமை இதற்கு காரணமாகியுள்ளது. | | |
| (ஈ ) | மீளாய்விற்கான ஆண்டில் திணைக்களத்திடம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற 9,478 முறைபாடுகளிலிருந்து 2,649 முறைபாடுகளின் பொருட்டு தற்காலிக தீர்வுகளை மட்டும் வழங்கியிருத்தல் மற்றும் 1,660 முறைப்பாடுகள் வேறு நிறுவனங்களிடமும் நபர்களிடமும் சமர்ப்பிக்கட்டதன் காரணமாக முறைப்பாடுகள் தொடர்பாக திணைக்களம் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலானது பலவீனமான மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | முறைப்பாடுகள் தொடர்பான பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | xt;nthU Kiwg;ghLfs; njhlu;ghfTk; gpd;dha;Tfis Nkw;nfhs;tjw;F jiyik mYtyfj;jplk; nry;twj;F Kbahik fhuzkhf khtl;l nrayhsupd; fz;fhzpg;gpy; mJ njhlu;ghf gpd;dha;Tfis Nkw;nfhs;Sjy; khtl;l rpWtu;fspd; cupikfs; Nkk;ghl;L mYtyu;fs;/ உதவியாளர்களால் மேற்கொள்ளப்படும். |
| | அவதானத்துடன் கூடிய நிலைமையில் உள்ள சிறுவர்களுக்க பாதுகாப்பு வழங்கும் நோக்கத்தில் 262 பாதுகாப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா.9,642,559 ஆன ஒதுக்கீடு 25 மாவட்ட செயலகங்களிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.8,652,000 ஐ செலவிடப்பட்டிருந்தது. பாதுகாப்பு திட்டங்களின் பொருட்டு கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள் தொடர்பான விபரங்களை பேணிச் செல்லாமை காரணமாக பாதுகாப்பு திட்டங்களுக்காக கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை மற்றும் தெரிவு செய்த முறைமை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியவில்லை. | பாதுகாப்பு திட்டங்களின் பொருட்டு கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள் தொர்பான விபரங்களை பேணுதல் வேண்டும். | பாதுகாப்பு திட்டங்களுக்கு கிடைக்கப்பெற வேண்டிய கோரிக்கைகள் தொடர்பான தகவல்களை சாராம்சமாக குறித்துக்கொள்ளும் முறைமை தற்போது தயாரிக்கப்படுகிறது. பாதுகாப்பு திட்டங்களில் தகவல்கள்படி சிறுவர்கள் எதிர் நோக்கியுள்ள அவதானத்துடன் கூடிய நிலைமை கவனத்தில் கொள்ளப்படும். நலன்களை எல்லா மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு கிடைக்ககூடிய வகையில் வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்படுவதுடன், விடய அலுவர்கள் மற்றும் உதவி ஆணையாளர்கள் உள்ளடக்கிய மூன்று பேர்களை தெரிவு செய்யப்படும் திட்டங்கள் அவதானிப்புக்கு உட்படுத்தப்படும். |